## DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 373/2018 |
| Deposition of witness for | Prosecution wit. PW.8 |
| Name | சிவலிங்கபெருமாள் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 15-11-2022

<u>முதல்விசாரணை</u>

1. நான் தற்போது இராமநாதபுரம் ஊழல் கண்காணிப்புத்துறையில் காவல் உதவி ஆய்வளாராக பணியாற்றி வருகிறேன், இதற்கு முன்பாக ஆழ்வார் காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது கடந்த 14.06.2018 ம் தேதி காவல்நிலையத்தில் தலைமக்காவலராக பழனிச்சாமி பணியில் இருந்த போது திருவைகுண்டம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக இருந்து சுப்பிரமணியன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.92/2018 u/Sec. 294(b), 324, IPC** ஆக வழக்கு பதிவு செய்தார். இதன் அசல் புகார்வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இதர நகல்களை புலனாய்வு அதிகாரி என் வசம் ஒப்படைத்தார்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 14.06.2018 ம் தேதி17 .00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகராஜ் மற்றும் வள்ளிநாயகம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 5** மற்றும் **அ.சா.ஆ 6** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் சுப்பிரமணியன் , மீனா, மாரிமுத்து, தமிழ்ச்செல்வன், முருகராஜ், வள்ளிநாயகம், சங்கரலிங்கம், பழனிச்சாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

5. இவ்வழக்கின் எதிரி கடந்த 14.06.2018 ம் தேதி 16.00 ஆழ்வார்திருநகரில் பஸ்ஸ்டாப்பில் வைத்து கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்ட்டார். இவ்வழக்கில் காயம்பபட்ட சுப்பிரமணி என்பவரை விசாரித்து மருத்துவர் கோகிலா என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு பெற்றேன் அந்த விபத்து பதிவேடு தன்மை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன்.

6. **u/Sec. 294(b), 324, IPC இலிருநது U/s 294(b), 326** சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். நான் தயார் செய்த சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரிகள் மீது கடந்த 02-08-2018 ம் தேதி **நி.கு.எண்.92/2018 U/s 294(b), 326** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

7. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்வம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்தவழக்கில் எதிரிக்கும் புகார்தாரருக்கும் என்ன விரோதம் என்றால் அதுகுறித்து நான் தனிப்பட்ட முறையில் விசாரிக்கவில்லை. கீதா என்பவரை சாட்சியாக இந்த வழக்கில் விசாரித்தேனா என்றால் இல்லை. கீதாவை ஏன் விசாரிக்கவில்லை என்ற காரணம் எனது புலன்விசாரணையில் தெரிவிக்கவில்லை.

8. முதல்தகவல்அறிக்கை u/sec 294(b) 324 என்று பதியப்பட்டதா என்றால் என்றால் u/sec 294(b) 324 ஆகதான் பதியப்பட்டது இதில் எதும் மாற்றம் செய்யப்பட்டதா என்றால் charge sheet ல் தான் மாற்றம் செய்யப்பட்டது. u/sec 294(b) 324 லிருந்து u/sec 294(b) 326 ஆக மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஏன் மாற்றம் செய்யப்பட்டது என்றால் மருத்துவர் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் மாற்றம் செய்யப்பட்டது.

9. மருத்துவர் அறிக்கையில் காயம்பட்ட நபர் என்ன சொல்வார்களோ அது தான் சான்றிதழில் தருவார்கள் என்றால் சரிதான். செங்கலை வைத்து அடித்தார் என்றால் சரிதான். செங்கலை வைத்து முட்டியில் அடித்தார்கள் என்ற விவரத்தை மருத்துவரிடம் சொன்னதை மருத்துவரும் இடது முட்டியில் அடிபட்டதாக சொன்னார் என்றால் சரிதான்.

10. மருத்துவரை விசாரிக்கும் போது சிதைந்த காயம் இருந்ததா என்று சொன்னரா என்றால் காயத்தின் தன்மை கொடுங்காயம் என்று சொன்னார். காயம்பட்ட நபர் புகார்வாக்குமூலத்தில் தான் மருத்துவரிடம் பொய் சொன்னேன் என்று சொன்னாரா என்றால் இல்லை. விசாரணை ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல. காயம்பட்ட நபரையோ மருத்துவரையோ இந்த வழக்கின் சாட்சிகளையோ சரிவர விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. யாரோ ஒருவர் எழுதிக்கொடுத்த

ஆவணத்தில் நான் கைபொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.
வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை